
திருக்குறள் உலக நூல்

# திருவள்ளுவரின் உலகளாவிய இன்பியல் சிந்தனைகள்

உலகச் சாதனை மாநாட்டு ஆய்வுக்கோவை

25.01.2025




பதிப்பாசிரியர்கள்

**முனைவர் கே. இரா. கமலா முருகன்**

**முனைவர் ம. கஸ்தூரிபாய்**

உயர் தமிழாய்வு மையம்

இராணி மேரி கல்லூரி ( தன்னாட்சி )

சென்னை – 600 004

# திருவள்ளுவரின் உலகளாவிய இன்பியல் சிந்தனைகள்

பதிப்பாசிரியர்கள்

**முனைவர் கே.இரா.கமலா முருகன்**

**முனைவர் ம.கஸ்தூரிபாய்**

வெளியீடு

**உயர் தமிழாய்வு மையம்**

இராணி மேரி கல்லூரி

சென்னை – 600 004

# நூல் குறிப்பு

நூலின் பெயர் : திருக்குறள் உலக நூல்
திருவள்ளுவரின் உலகளாவிய இன்பியல் சிந்தனைகள்

பதிப்பாசிரியர் : முனைவர் கே.இரா. கமலாமுருகன்
முனைவர் ம.கஸ்தூரிபாய்

நூல் உரிமை : பதிப்பாசிரியருக்கு

பொருள் : இலக்கியம்

பதிப்பாண்டு : முதற்பதிப்பு ஜனவரி 2025
திருவள்ளுவர் ஆண்டு 2055

நூல் அளவு : 1 X 8 டெம்மி

பக்கங்கள் : 128

அச்சிட்டோர் : மணிவாசகர் பதிப்பகம்
1 P.A.N. ராஜரத்தினம் சாலை,
3வது சந்து, வண்ணாரப்பேட்டை,
(ரெயினி மருத்துவமனை அருகில்)
சென்னை – 600 021.
அ.பே. 93805 30884.

வெளியீடு : உயர் தமிழாய்வு மையம்
இராணி மேரி கல்லூரி
சென்னை – 600 004
அ.பே. 94440 77737

விலை : ரூ. 175.00

குறிப்பு இந்நூலிலுள்ள கட்டுரைக்கு ஆய்வாளர்களே முழு பொறுப்பு

# பொருளடக்கம்


1. பொருளியல் அளவிலான இன்பங்கள் — ம. அநிஷா நிலோஃபர் 8

2. திருவள்ளுவரின் உலகளாவிய காமத்துப்பால் அளவிலான இன்பங்கள் — முனைவர் கு. இராஜசேகரி 21

3. பண்புடைமையே தலைசிறந்த இன்பம் — முனைவர் கே. இரா.கமலாமுருகன் 28

4. அறமே இன்பம் – பசி ஆற்றுவித்தலே பேரின்பம் — முனைவர் ம. கஸ்தூரிபாய் 36

5. சொல் அளவிலான இன்பியல் சிந்தனைகள் — பொ.சக்திமயில் 42

6. உலகளாவிய இன்பத்திற்குரிய இனிய சொற்களைப் பேசுதல் — மு. சுகவாசன் 48

7. களவின்பமே உலகின்பம் — முனைவர் மு.செண்பகவள்ளி 56

8. வள்ளுவம் காட்டும் வாழ்வியல் இன்பங்கள் — முனைவர் ந.கி.தேவி 63

9. இன்பியல் சிந்தனைகளில் – நகை — முனைவர் தே. தேன்மொழி 70

10. குறள் காட்டும் வாழ்வியல் இன்பம் — முனைவர் எ. பாவலன் 79

11. வள்ளுவர் காட்டும் இன்ப வாயில்கள் — முனைவர் இரா. பூங்கோதை 85

12. பொருளியலே இன்பம் — முனைவர் அ. மகாலட்சுமி 91

13. இன்பியலில் கண் — முனைவர் செ.மார்கண்டன் 98

14. பல்வகை இன்பங்கள் — ர.யோகவள்ளி 106

15. வள்ளுவரின் இன்ப இயல்புக் கோட்படுகள் — முனைவர் பெ.ஜெயா 115

16. குடும்ப அளவிலான இன்பங்கள் — ஜா.ஜோன் சில்வியா பிரேமா 122

# இன்பியல் சிந்தனைகளில் - நகை

முனைவர் தே. தேன்மொழி
உதவிப் பேராசிரியர்
வேல்ஸ் பல்கலைக்கழகம்
சென்னை -117
செல்: 8610929727

## முன்னுரை

வாழ்க்கையில் ஏற்படும் நிகழ்ச்சிகளில் தோன்றும் சுவைகளைக் கவிஞன் மிகத் தெளிவாகவும், விளக்கமாகவும், தன் கவிதைகளில் எடுத்தாண்டிருக்கும் முறைகளில், அவன் காட்டும் தோற்றங்களில் நாம் ஒன்றி விடுகிறோம். நாம் நேரில் அனுபவிக்கும் பொழுது நம் சிந்தனையைச் செலுத்த முற்படுபடுகிறோம்; சுவைகளின் பயன் கிடைக்கிறது. உணவின் தரத்தை நாவின்சுவையால் மதிப்பிடுவது போலவே, இலக்கியத்தின் தரத்தையும் உணர்வுச் சுவையால் மதிப்பிடுகிறோம். பலமுறை படிக்கிறோம்; பொருளை உணர்கிறோம்; மொழி நடை, அணி, அமைப்பை ஆராய்கிறோம். அப்பாடற் சுவையின் அளவிற்கு ஏற்ப, அப்பாடலின் மதிப்பும் நம் மனத்தில் உருவாகிறது. மனதிற்கு இன்பத்துப் உலகலாவிய இன்பியல் சிந்தனைகளில், 'நகை' என்கின்ற உயர்ந்த உணர்வை இன்பத்தைத் தரும் நகைச்சுவையை முதன்மையாக அமைத்துக் காட்டி அருமையான செய்திகளை எல்லாம் திருவள்ளுவனார் நமக்குச் சொல்லி வைத்த குறள்களின் மூலம் விளக்க இக்கட்டுரை முற்படுகிறது.

## திருக்குறள்

எவ்வளவோ நாகரிக அலைகள் புரண்டபின்னரும் தமிழர் தம் வாழ்வியற் பெருமையைக் குறிகாட்டி, தமிழர் பண்பாட்டுத் துறைமுகக் கலங்கரை விளக்காக நின்றுரைப்பது திருக்குறள் என்ற புதையல் நூல். உலகம் உய்த்திட மக்கள் வாழ்வாங்கு வாழவும், சந்ததிகள் பெருகவும், மனிதகுலம் தழைக்கவும், இல்வாழ்க்கை இனித்திடவும், குடும்பங்கள்

நிறைவுறாமல் நலவாழ்வு வாழவும் பல்வேறு வழிகாட்டல்களைத் தருவது திருக்குறள்.

**இன்பத்துப்பால்**

உள்ளத்திசைவுடைய காதலும், உடற்புணர்ப்புடைய காமமும் முகிழ்த்த பின்னரான இல்லற வாழ்வின் எதிர்பார்ப்புகள் காமத்துப் பாலில் கருத்துரைகளாகின்றன. தலைவனும் தலைவியும் முதன் முதலில் கண்டு காதல் கொள்வதும், அதன் தொடர்ச்சியாக உள்ளத்தாலும் உடலாலும் இணைந்து இன்பம் துய்க்கும் நெறிமுறைகளைப் பாலியல் கல்வி சார்ந்த உளவியல் அடிப்படையில் இன்பத்துப்பாலின் குறள்கள் அமைந்துள்ளன.

திருக்குறளில் இன்பத்துப்பாலில் உலகக் காதல் இலக்கியங்களுக்கு ஒப்பாக ஊடியும், உரையாடியும், பழகியும், பார்த்தும், உள்ளத்தால் அனுபவிக்கும் இன்பங்களை,

> **"உவந்து உறைவர் உள்ளத்துள் என்றும்;**
> **இகத்து உறைவர் ஏதிலர் என்னும் இவ்வூர்'**
>
> (குறள் : 1130)

என்று ஒருவகையாகவும், தலைவன் தலைவியின் அழகையும் தலைவி தலைவனின் அழகையும் கண்டு மயங்குதல் குறிப்பறிந்து இருவரும் கூடி ஐம்புல இன்பம் துய்த்தல், கூடி மகிழ்ந்த தலைவனும் தலைவியும் அவரவர் அழகைப் பாராட்டுதல், இருவரும் நாணத்தை விட்டு வருந்துதல், முன்பு நிகழ்ந்த ஊடலின் இனிய அனுபவத்தைப் பரிமாறல் என்பது,

> **"உணவினும் உண்டது அறல் இனிது; காமம்**
> **புணர்தலின் ஊடல் இனிது"** (குறள் : 1326)

மற்றொரு வகையாகவும் அமைந்துள்ளது.

மனித தத்துவ அக வாழ்வியல் ஒரு பருவத்தோடு நிறுத்தாமல் அப்பருவ மகிழ்வின் காதல், கூடல், பாலுணர்ச்சி, அன்பின் உயிர்ப்பாய், நேசமாய், பாசமாய் பரிவாய் அருளாய், பரவி விரியும் பண்பாட்டியலை உணர்த்தும் வகையில் அமைந்துள்ளது.[1]

**உலகலாவிய இன்பியல்**

உலகத்துப் பிறபொருள் அனைத்தும் ஐம்புல இன்பத்தில் சில இன்பமே தரக்கூடியதாயிருக்கும். சோலையில் உலாவினால் கண்ணுக்கு இனிமை உண்டு ; அங்குள்ள பறவைகளின் ஒலியினால் காதிற்கு இனிமையுண்டு. அச்சோலைதரும் கனி களை உண்பது நாவிற்கும் அச்சோலை மலர்களை முகர்வது மூக்கிற்கும் அங்குள்ள மலர்களைத் தொடுதலும் அணிதலும் உடலிற்கும் இன்பம் தரும். ஒரே மலர் காண, முகர, தொட என மூன்று புலன் இன்பந்தரலாம். இவ்வாறு உலகத்துப் பிற பொருள்களும் ஒரு புலனுக்கோ, ஒன்றிரண்டு புலனுக்கோ இன்பம் தருவன. காதல் இன்பமே காண இனிமை தரும் அவள் அழகால்; கேட்க இனிமைதரும் அவள் பேச்சால்; உண்ண இனிமைதரும் 'பாலொடு தேன் கலந்தன்ன வாலெயிறூறிய' இதழ் நீர் பருகலால்; முகர்தலுக்கு இனிமைதரும் அவள் கூந்தலால், நெற்றியால், நறுமலர் மேனியால்; தீண்டுதற்கும் இனிமைதரும் கூடலின்பத்தால்... இவ்வாறு ஐம்புல இன்பத்தையும் ஒருசேரத் தருவது காதலுக்கிசைந்த பெண் ஆவாள். இது வள்ளுவர் முடிவன்று. வள்ளுவர் விளக்கிக் காட்டும் உலக முடிவாக அமைந்துள்ளது. [2]

**நகைச்சுவை**

நகைச்சுவை என்பது மக்களுக்கென்றே உண்டான அரிய சுவையாகும். ஏனைய பிறவிகளுக்கு நகைச்சுவையை நுகரும் வாய்ப்பு இல்லை. நகைச்சுவையினை அறிந்து பயனடையாத மக்கள் வாழ்க்கை பயனற்றதாகும். மனிதப் பண்பாடுகளில் மிக மிகத் தேவையான பயனுள்ள வளர்க்க வேண்டிய தன்மை, நகைத்து மகிழ்தல் என்னும் குறிக்கோள் நமது வாழ்க்கையில் ஊறிவிடுதல் வேண்டும்.

மனித சமுதாயத்தைச் சேர்த்து ஒன்றுபடுத்தி ஒற்று மைக்கு வித்திட்டு வளர்ப்பது விரிந்த உள்ளமும் கூட்டுறவும் ஆகும். கூட்டுறவு என்பது நட்பு என்னும் அடிப்படையில் வளர்க்கப்படுவது. நட்பு என்பது நல்ல உள்ளம் தருகின்ற பரிசு ஆகும். ஆதலால்தான் நகைத்தல் – மகிழ்தல் என்பது மனத்திலிருந்து வெளிப்படுதல் வேண்டும். மனத்தில் வெளிப்பட்ட பிறகு அந்த மகிழ்ச்சி முகத்தில் தோன்றும். மனத்தினாலும் அகத்தினாலும் நகை–மகிழ்ச்சி கொண்டு அதன்

காரணமாக முகமலர்ச்சி தோன்றுதல் வேண்டும். வெறும் முகம் நகைத்துக் காட்டும் நிகழ்ச்சி பயனற்றதாகும்.

**முகம் நக நட்பது நட்பன்று நெஞ்சத்து**
**அகம் நக நட்பது நட்பு** (குறள்:786)

என்ற எளிமையானதொரு குறட்பா இக்கருத்தினை எடுத்துக் காட்டிவிடுகின்றது.

நகைப்பு என்பது உள்ளத்தில் உள்ளதை வெளிப்படுத்துங் கருவி என்பது பொது விதி. இப்பொது விதியின் கருத்தோடு காணுகின்றபோது பெண்கள் நகைப்பதில் மிக ஆழமான உண்மைகள் அடங்கிக்கிடக்கின்றன முற்றிலும் உண்மையாகும். புரிந்துகொள்ள முடியாத சிரிப்புக்கள் பல நாம் பழக்கத்தில் கண்டு வருவதேயாகும். சிரிப்பு என்பது அத்தகைய ஆழமான பெருங்குறிப்புகளை உணர்த்துவதாக அமைந்து விடுகின்றது.[3]

ஓர் ஆண் மற்றோர் ஆணைப் பார்த்துச் சிரிப்பதால் உண்டாகின்ற நிலையைவிட ஒரு பெண் ஓர் ஆணைப் பார்த்துச் சிரிப்பதில் மிகமிக ஆழ்ந்த எண்ணங்கள் உண்டு என்பதை ஆசிரியர் வள்ளுவனார் பல இடங்களில் சுட்டிக்காட்டுகின்றார்.

'தன்னுடைய உள்ளத்திலுள்ள மறைபொருளான பெரும் எண்ணத்தினை எளிதான புன்முறுவலென்னும் நகைக் குறிப்பினால் ஒரு பெண் உணர்த்தி விடுகின்றாள்' என்று வள்ளுவர் கூறுகின்றார். புன்முறுவல் காட்டி நகைக்கின்றாள். அந்த நகைப்பு அவள் உள்ளத்திலிருக்கும் அளந்து பார்க்க முடியாத இன்ப எண்ணங்களைக் காட்டிவிடுகிறது. அப்படிப் பட்ட நகைப்பினை,

**முகைமொக்குள் உள்ளது நாற்றம்போல் பேதை**
**நகைமொக்குள் உள்ளது ஒன்(று) உண்டு.** (குறள்: 1274)

என்ற குறட்பா எடுத்துக்காட்டுகிறது. அவள் உள்ளத்தில் கொண்டுள்ள இன்ப வேக எண்ணத்தினையும் அந்த நகைப்பு காட்டி விடுகின்றது.[4]

மனித இயல்புகளுக்கு எல்லாம் மூலமாகவும், அறத்தையும் உணர்த்தி, வாழ்க்கை முறையினையும் நிறுத்தி, மக்களையும் திருத்தி அங்கே பக்குவமாக நல்ல நகைச்சுவையை உணர்த்தி,

பேசுதல் அவர்களுக்கு இயல்பான பண்பாகும். தன்னுடைய கண்களை நோக்கி அந்தக் காதலி சொல்லுகின்றாள். அந்த நோத்தில் விரைந்து சென்று காதலனைக் 'கண்ட' கண்கள் இப்போது தாமே அழுதுகொண்டு இருப்பது நகைப்புக்கு இடம் கொடுக்கிறது என்று அந்தக் காதலி சொல்லுகின்றாள். தாமே காதலனை விரைந்து சென்று பார்த்த கண்கள் பிரிந்திருக்கும் போது அழுதுகொண்டு இருக்கலாமா என்பதை, இதனை,

**கதுமெனத் தாம்நோக்கித் தாமே கலுழும்**
**இது நகத் தக்கது உடைத்து** (குறள் : 1173)

என்ற குறள் வெளிப்படுத்துகின்றது.[8]

**காதல் மிகுதலில் நகை**

கண்ணில் இருக்கின்ற காதலனுக்கு உறுத்தி துன்பம் தந்துவிடுமென்று கண்ணுக்கு மை தீட்டமாட்டேன் என்று கூறும் பெண்ணின் செயலை, குறள்: 1127 என்ற குறளும், நெஞ்சத்தில் குடியிருக்கும் காதலனை சுட்டுவிடுமென்று பயந்து, சூடாக எதையும் குடிக்க மறுக்கும் நிலையை, குறள்: 1128 என்று எண்ணியதையும், பூவின் காம்பை எடுக்காமல் தலையில் வைத்ததால் இடுப்பு ஒடிந்து சாகும் நிலை ஏற்படும் என்பதை, குறள்: 1115என்ற குறளின் மூலம் பெண்மையின் மென்மையில் வெளிப்படும் இனிமையான நகைச்சுவை உணர்வைப் பதிவு செய்துள்ளார்.

தலைவியின் முகத்திற்கும் சந்திரனுக்கும் வித்தியாசம் புரியாமல், விண்மீன்கள் எல்லாம் அந்தப்பக்கமும் இந்தப்பக்கமும் ஒரு நிலையில் இல்லாமல் கலங்கிய நிலையை,குறள்: 1116 என்ற குறளின் மூலம் அறிய முடிகிறது. தலைவியைப் பார்த்து குவளைப் பூ, தன் தலைகவிழ்ந்தது; ஏனெனில் அவளுடைய கண்ணுக்கு இணையாக மாட்டோம் என்று வெட்கப்பட்ட நிலையை, குறள்: 1114 என்ற குறளின் மூலம் அறிய முடிகிறது.

**உலக நூல் திருக்குறள்:–**

அரசன் முதல் அடித்தட்டு மக்கள் வரை சாதி, மதம், மொழி, இனம், என்ற வேறுபாடு இல்லாமல் உலக மக்கள் அனைவரும் உணர வேண்டிய உலகலாவிய இன்பியல் சிந்தனைகளில் 'நகைச்சுவை'

உணர்வு அனைவரும் உணரும் வகையில் பொது நிலையில் வைத்து திருவள்ளுவர் திருக்குறளில் கூறியுள்ளதால் திருக்குறள் உலக நூல் என்பது நிருபணமாகிறது.

## நிறைவுரை

இங்ஙனம் உலகலாவிய இன்பியல் சிந்தனைகளை உள்ளடக்கிய திருக்குறளில் நகைச்சுவை தரும் இன்பியல் சிந்தனைகளை (உணர்வுகளை) இக்கட்டுரை வெளிப்படுத்தியுள்ளது. திருக்குறள் உணர்த்தும் இன்பியல் சிந்தனைகள் இன்றைய சமுதாய சூழலுக்கு அருமருந்தாக அமையும் என்பதில் ஐயமில்லை.

## அடிக்குறிப்புகள்:

1. தமிழண்ணல், இலக்கியத்தில் இன்பச் சுவை (உவகை, செல்வி பதிப்பகம், காரைக்குடி, பதிப்பு: 1956, பக்.45–56)
2. திருக்குறள் கதைகள் , இன்பத்துப்பால், கே.வி.குணசேகரம், பதிப்பு: 2015, ப.27.
3. திருக்குறளில் நகைச்சுவை, திருக்குறளார்,திருக்குறளார் பதிப்பகம், சென்னை –35, பதிப்பு: 1966, ப.17.
4. மேலது, ப.31.
5. மேலது, ப.44.
7. மேலது, ப.140
8. மோகனராசு, முனைவர் கு., திருவள்ளுவரின் இன்பியல் கோட்பாடுகள், மணிவாசகர் பதிப்பகம், சென்னை –108.ப.32.

## துணை நின்ற நூல்கள்


1. குணசேகரம்,கே.வி., திருக்குறள் கதைகள், இன்பத்துப்பால்,. பதிப்பு: 2015.
2. தமிழண்ணல், இலக்கியத்தில் இன்பச் சுவை (உவகை), செல்வி பதிப்பகம், காரைக்குடி, பதிப்பு: 1956
3. திருக்குறளார், திருக்குறளில் நகைச்சுவை, திருக்குறளார் பதிப்பகம், சென்னை–35, பதிப்பு:1966

4. மோகனராசு, முனைவர் கு., திருவள்ளுவரின் இன்பியல் கோட்பாடுகள், மணிவாசகர் பதிப்பகம், சென்னை –108

## ஆய்வு முடிவு

நவீனமயமாக்கல் மற்றும் இயந்திர தனமான வாழ்க்கைச் சூழலில் சிக்குண்டு தவிக்கும் இன்றைய தலைமுறையினருக்கு வாழ்வில் ஏற்படும் பல்வேறு சங்கடங்களைத் தீர்க்க வழிகாட்டும் வாழ்வியல் களஞ்சியமாக திருக்குறள் விளங்குகிறது. உலக மக்கள் அனைவரும் காணும் இடமெல்லாம் நடைமுறை செயல்பாடுகளில் எல்லாம் நகைச்சுவை இன்ப உணர்வின் சிந்தனைகள் மேலோங்கி நிற்கும் என்பது உறுதி.